மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதிலே 14 ஆண்டு காலத்திற்கு நாங்கள் பொறுப்பல்ல. (சிரிப்பு).

மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு வேலை.

*455. **திரு. எம். சீரங்கன் :**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு வேலை வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வேலை வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு இதுவரை நிலம் கொடுத்த நபர்களில் 289 குடும்பங்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

10-15 மணி

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேட்டூரில் அனல் மின்சார நிலையம் கட்டுவதற்காக அங்கு சாகுபடி செய்து கொண்டிருந்த விவசாயிகளிடத்திலிருந்து நிலங்களை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு பட்டாதாரருக்கும், அதாவது யார் சாகுபடி செய்து கொண்டு இருந்தார்களோ அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுப்பது என்ற ஒப்பந்தத்தின் பேரில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் நிலம் எடுக்கப்பட்டவர்களில் 315 பேர்களுக்குக் கடைசியாக வேலை கொடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு முதல்வர் மேட்டூர் வந்தபோது தெரிவிக்கப்பட்டது. முதல்வரவர்கள் அவர்களுக்கும் வேலை கொடுப்பதாக அறிவித்தார்கள். அதன் பிறகு இன்று வரை 80 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டு இருக்கின்றது. மீதிப் பேர்களுக்கு பல்வேறு காரணங்களைச் சொல்லி காலம் கடத்திக்கொண்டு இருக்கின்றார்கள். அரசினிடத்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் பல்வேறு முறைகள் இது சம்பந்தமாக விளக்கங்கள் சொல்லி ஆகிவிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த விவரங்களோடு யார் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர் என்ற பட்டியல் அனுப்பி இருக்கிறார். அந்தப் பட்டியலின் அடிப்படையில் யார் உரிமையாளர்கள் என்பதைப் பார்த்து வேலை கொடுப்பதற்குப் பதிலாக, அந்தப்

1989 நவம்பர் 2]

பட்டியலில் உன்னுடைய பெயர் கிடையாது; இதனால் உனக்கு வேலை இல்லை, என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பல் வேறு காரணங்களைச் சொல்லி அந்த விவசாயிகளை.... (மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வினாவா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவரவர்களே, வருவாய்த்துறை அதிகாரிகள் மூலமாக யார் யாருடைய நிலம் என்று பேர் கொடுக்கப்பட்ட 541 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் என்று தெரிவிக்கப்பட்டு இதுவரை முதல்வர் கலைஞர் அவர்கள் மேட்டூர் அனல் மின் நிலையத் துவக்க விழாவின்போது, அவர்கள் கோரிக்கை வைத்ததையொட்டி 353 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 188 குடும்பங்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்புத்தர முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த 188 குடும்பங்களில் தகுதியான படித்த இளைஞர்கள் இல்லாத காரணத்தால் ஒவ்வொருவருக்கும் கூட்டுகின்ற வேலை அல்லது பெருக்குகின்ற வேலை தரவேண்டி இருக்கின்ற காரணத்தால் அந்த வேலை இப்போது காலியாக இல்லாத சூழ்நிலையில் அவர்களுக்கு வேலை கொடுப்பதில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டு இருக்கிறது. இருந்தாலும் வெகு விரைவிலே பாதிக்கப்பட்ட அத்தனை குடும்பங்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று படித்தவர்களுக்கு வேலை என்பது, விவசாயக் குடும்பத்தில் இருப்பவர்கள் அப்படிப்பட்ட பட்டதாரிகளாக இருக்க முடியாது; சாதாரணப் படிப்பு இருந்தாலும் கூட அவர்களுக்கு வேலை கொடுப்பதாகத் தான் ஒப்பந்தம். அவர்களுக்கும் வேலை கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பதில் இல்லை).

நாசியம்பட்டியில் துணை மின் நிலையம் அமைத்தல்.

*3414. திரு. எஸ். குணசேகரன் :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாசியம்பட்டியில் துணை நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?